**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – 600 018.**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், |
| ஆணையர், | 170, பெரியார் ஈ.வெ.ரா.சாலை, |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | கீழ்ப்பாக்கம், |
| தேர்தல் ஆணையம், | சென்னை – 600 010. |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | |
| சென்னை –18. | |

ந.க. 875/2023/கூதே.1 நாள் : 07.02.2023

ஐயா,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – எதிர்வரும் 2023 ஒட்டு மொத்தத் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் – கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்களின சேவைகளை பயன்படுத்துதல்-தொடர்பாக.

******

ஐந்து கட்டங்களாக நடைபெற்ற 2018 ஒட்டு மொத்தத் தேர்தல்களில் முதற்கட்டத்தில் நடைபெற்ற சுமார் 18468 தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் மார்ச் 2018 முதல் ஆகஸ்டு 2018 வரையிலும் 4 நிலைகளாக நடைபெற்றன.

1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 33(10)(a)-இன்படி இச்சங்கங்களின் நிர்வாகக்குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்டு 2023 வரையிலான கால அளவில் முடிய உள்ளன.

இவ்வாறு 5 ஆண்டுகள் 02.04.2023 அன்று முடிவுறும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் புதிதாகப்பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் போன்ற வகையில் தேர்தல் நடத்தவேண்டிய சங்கங்களுக்கான நிர்வாகக்குழு தேர்தல்களை சட்டப்பிரிவு 33(11)(a) மற்றும் (b)-இல்

கட்டளையிட்டுள்ளபடி ஆணையம் நடத்த வேண்டியுள்ளது. இதற்கான பல்வேறு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆணையம் மேற்கொண்டுள்ளது.

அவ்வகையில் சமீபத்தில் கூட்டுறவுத்துறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ள இதர துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டன. இக்கூட்டங்களில் குறைந்த எண்ணிக்கை மற்றும் செயல்படாத (Dormant) கூட்டுறவுச் சங்கங்களை தங்களது நிர்வாகக்கட்டுப்பாட்டில் கொண்ட சில துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தங்களது சங்க தேர்தல் நடவடிக்கை தொடர்பாக தேர்தல் அலுவலர்கள் நியமனம், தேர்தல் நடத்துவதற்கான இடங்கள், பயிற்சி (Training), தேர்தல் நடத்துவதற்குத் தேவையான வாக்குப்பெட்டி, வாக்குச்சீட்டு உள்ளிட்ட இதர பொருட்களை (Polling Materials) ஏற்பாடு செய்தல், வழங்குதல் போன்ற செயல்பாடுகளை (arrangements) தனித்தனியே ஒவ்வொரு துறையும் மேற்கொள்வதற்குப் பதிலாக அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான ஏற்பாடு (Arrangements in Common) மேற்கொள்வது நடைமுறைச் சிரமங்களைக் குறைக்க உதவிடும் என்ற கருத்து சில துறைகள் சார்ந்த மாவட்ட தேர்தல் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

இக்கோரிக்கையின் சாதக பாதக இனங்களை ஆணையம் மிகக் கவனமுடன் பரிசீலனை செய்தது.

அப்பரிசீலனையில், சில துறைகளின் மாவட்டதேர்தல் அலுவலர்கள் தெரிவித்தபடி, மாவட்ட அளவில் அனைத்துத்துறைகளுக்கும் உதவிடும் வகையில் ஒரு பொதுவான ஏற்பாடு / ஒருங்கிணைப்பு இருப்பது ஆணையத்திற்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைகள்படி கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், (Free, Fair) வெளிபடைத்தன்மையுடனும் சிறப்பாக ஆணையம் நடத்திட மிகவும் உதவிடும் என்றும், இத்தகைய ஒருங்கிணைந்த செயல்பாட்டினை செயல்படுத்திட மாவட்ட அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளர் (Coordinator) தேவை எனவும் ஆணையம் கருதுகிறது.

அவ்வகையில் அடியிற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் அவ்வப்போது தேவையென ஆணையம் குறிப்பிடும் பணிகளையும் அனைத்து துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் இணைந்து செயல்படுத்துவது சிறப்புடையதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

இக்கருத்தின் அடிப்படையில், ஒவ்வொரு துறையின் மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் நடத்த வேண்டிய சங்கங்களின் எண்ணிக்கையினைக் கணக்கிற் கொண்டும், இவ்வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவுத் துறையின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கூடுதல் எண்ணிக்கையில் இருப்பதைக் கருத்திற்கு கொண்டும், மாவட்ட அளவில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செயல்பட ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள் இவ்வாறான ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவது கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதியின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை ஆணையம் நடத்திட மிகவும் தேவையானதொன்று (necessary for the purpose of giving due effect to these rules or holding any Election under the Act and the Rules) என்றும் ஆணையம் கருதுகிறது. அவ்வாறே தீர்மானிக்கிறது.

இத்தீர்மானத்தின் அடிப்படையில் ஆணையம் உத்தேசித்துள்ள (Proposed) நடவடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத்துறை கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் (Regional Joint Registrar of Cooperative Societies) அம்மண்டலத்திலுள்ள அனைத்து துறைக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் திட்டம் வழங்கப்பட்ட அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறும் வகையில் அக்கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயலாற்றி மாவட்ட கூட்டுறவுத் தேர்தல்

ஒருங்கிணைப்பாளராக (District Cooperative Election Coordinator) ஆக நியமிக்கப்படுகிறார். அவர் அவ்வாறே செயல்படுவார்.

(2) ஒவ்வொரு துறையின் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகளை பொருத்து தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமைகளையும் பொறுப்புகளையும் எவ்வித விடுதலுமின்றி தாங்களே மேற்கொள்ள வேண்டும்.

(3) எந்தெந்த இனங்களில் மாவட்ட கூட்டுறவுத் தேர்தல் ஒருங்கிணைப்பாளரின் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு, தேவை என்று அவரால் கருதப்படும் இனங்களில், ஒருங்கிணைப்பாளரை உடனடியாகத் தொடர்பு கொண்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாவண்ணம் செயலாற்ற வேண்டும்.

(4) ஒருங்கிணைப்பு தேவைப்படலாம என்று கருதப்படும் இனங்கள் :-

(1) தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி

(2) தேர்தல் நடத்துவதற்கான இடவசதி

(3) தேர்தலுக்கான சுவரொட்டிகள் (Poster) மற்றும் வெளியீடுகள் (Pamphlets)

(4) வாக்குப்பெட்டி பெறுதல், வாக்குச்சீட்டு அச்சடித்தல், மற்றும் தேர்தல் நடத்துவதற்கான இதர சாதனங்கள் (Polling Materials)

(5) ஆள் பற்றாக்குறை (Man power), நிதிபற்றாக்குறை (Finance) போன்றவற்றில் தகுந்த ஆலோசனை பெறுதல்

(6) ஒட்டு மொத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(7) மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் தேவைகளை தக்க முறையில் பயன்படுத்துதல்

(8) மாவட்ட நிர்வாகத்துடன் தேவைப்படும் இனங்களில் தொடர்பு கொள்ளுதல்

(9) மற்றும் சூழ்நிலைகேற்ப (Facts and Circumstances) தேவைப்படும் இனங்கள்

(5) மேற்கண்ட வகையில் செயலாற்றும் போது இடையூறுகள் (Difficulties in implementation) எவையெனும் இருக்கும் நிலையில் அவற்றினை உடனடியாக ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

இந்நடவடிக்கைககளில் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருப்பதாலும் அவர்களது சேவையைக் குறிப்பிட்ட வகையில் ஆணையம் பயன்படுத்த உள்ளதாலும், கூட்டுறவுத் தேர்தல்கள் சிறப்பாக நடத்திட தங்களது ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக முக்கியமானதும் அவசியமானதும் என ஆணையம் கருதுவதாலும் ஆணையம் உத்தேசித்துள்ள இந்த நடவடிக்கைகளை தங்களது அன்பான கவனத்திற்கும் ஆலோசனைக்கும், உரிய நடவடிக்கைக்கும் ஆணையம் தங்களுக்கு அனுப்புகிறது. இதற்கான உரிய அறிவுரைகளை கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளருக்கு அனுப்பிடவும் அதுபற்றிய விவரத்தை 15.02.2023-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

7/2/2023

நகல் :

1. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.
2. கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம்.
3. அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள்.
4. அனைத்துத்துறை மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
5. அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 9.
6. கூட்டுறவு தேர்தல் பிரிவு – 3.
7. இருப்புக்கோப்பு – 2023.